அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/93

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993.09.08 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

ஓய்வூதியமுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு அரசாங்க
சேவைசகாய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும்
<u>உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய உரிமைய வழங்குதல்.</u>

1978.02.07ஆந் திகதி 42ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு உங்கள் கவனம் கோரப்படுகிறது.

02. அச் சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 1977.10.05 ஆந் திகதிக்கு பின்பு அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்ட அனைத்துப்பெண் உத்தியோகத்தர்களும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையவர்களாக நியமிக்கப்பட வேண்டும். ஆயினும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் ஓய்வூதிய உரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பெண் உத்தியோகத்த எவரிடமிருந்தாவது அரசாங்க சேவை சகாயநிதிக்கு உதவு தொகை அறவிடப்படுவதாக இருப் பின் அதை உடனடியாக நிறுத்தி ஆரம்ப நியமனத்திகதி தொடக்கம் ஓய்வூதிய உரித்துடைய நிலைமையை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

03. 1977.10.05ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதிய உரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப் பட்டிருப்பினும் 1978.02.07ஆந் திகதிய 42ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைக்கு இணங் கவோ தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ள 1957.04.29ஆந் திகதிய 372ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்கவோ அரசாங்க சேவை சகாயநிதியத்திற்குத் தொடர்ந் பங்களிக்க விருப்பம் தெறிவித்த பெண் உத்தியோகத்தர்களுக்கு அவர்களது விருப்பத்துக்கேற் ஓய்வூதிய உரித்துடைய நிலைமையைப் பெறுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்க அரசாங்க தீர்மானித்துள்ளது.

0.4. இதன்படி உங்கள் அலுவலகத்தில் ஓய்வூதிய உரிமையுடைய பதவிகளில் கடமை புரியும் பெண் உத்தியோகத்தர்களின் சொந்த ஆட்கோவைகளை பரிசீலனை செய்து அரசாங்க சகா நிதிக்கு உதவு தொகை செலுத்தும் அனைத்து பெண் உத்தியோகத்தர்களிடமிருந்தும் அதற்கா விருப்பத்தை 01ஆம் இலக்கமுள்ள பின்னிணைப்பு ஆவணத்தில் 1993.12.31க்குள் பெற்றுச் சொந்த ஆட்கோவையில் உள்ளடக்குதல் வேண்டும்.

05. தபுதாரர்கள் அநாதைகளின் ஓய்வூதியத் திட்டம் 1983.08.01ஆந் திகதி தொட கமே ஆரம்பிக்கப்பட்டது. எனவே 42ஆம் இலக்கமுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க சேவை சகாய நிதியத்தில், தொடர்ந்தும் இருப்பதற்கு விருப்பம் தெறிவித்துள்ள பெண் உத்தி- யோகத்தர்களை ஓய்வூதியவுரித்து நிலைக்கு 1977.10.05ஆந் தொடக்கமே நியமிக்கப்

6....02.

படுவதால் அவர்கள் தபுதாரர்கள், அநாதைகள், சிறுவர்கள் ஓய்வூதிய திட்டத்துக்கு விருப்பத்தை தெவிப்பின் அந்த விருப்பத்தை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் செயலாளருக்குச் சமர்ப்பித்து அதில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவிக்கவும்

06. பின்வரும் அறிவுறுத்தல்கள் உங்கள் கவனம் செலுத்தப்படுகிறது:

(1) தபுதாரர்கள் திட்டத்தின் அங்கத்துவம் தொடர்பாக விதவை அநாதை ஓய்வூதிய செயலாளரினதும், கணக்காளரினதும் அறிவுறுத்தல்களுக்கிணங்க நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(2) ஓய்வூதியமுடைய சேவைக்கு நியமிக்கப்பட்டதாகச் சான்றிதழொன்று ஒவ்வொரு பெண் உத்தியோகத்தரினதும் வரலாற்றுத்தாளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் குறிக்கப்பட்டுச் கைச்சாத்திடப்பட வேண்டும். இணைந்த சேவைக்குரித்தான பெண் உத்தியோகத்தர்களை இணைந்த சேவைப் பணிப்பாளரால் ஓய்வூதிய உரித்துச் சேவைக்கு நியமிக்கப்படுவர்.

(3) ஓய்வூதிய சுற்றறிக்கை 42க்கிணங்க ஓய்வூதியமுடைய சேவைக்குச் சேர்வதற்கு விருப்பம் தெறிவிக்காத பெண் உத்தியோகத்தருக்கு ஓய்வூதியமுடைய சேவைக்குச் சேர்வதற்கு வழங்கப்படும், இறுதிவாய்ப்பு இதுவே என்பதால் இந்தச் சுற்றறிக்கை தொடர்பாக உரிய விண்ணப்பத்தைச் செய்யுமாறு அனைத்துப் பெண் உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்க.

(4) 90.10.18ஆந் திகதிய 44/90ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் படி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக இந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாவதுடன் அவர்கள் 1990.10.18ஆந் திகதி தொடக்கம் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள இடமளித்தல் வேண்டும்.

(5) அரசாங்க சேவை சகாய நிதியத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கு உத்தியோகத்தர் எவராவது எதிர்பார்ப்பின் அந்த விருப்பத்தின் பிரதியொன்று அரசாங்க சேவை சகாய நிதியத்தின் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒப்பம். எம். டி. டீபீரிஸ்
செயலாளர்
அரசாங்க நிருவாக அமைச்சு.